


அ.எண் : 83/2016

தேதி : 30.04.2016

# சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்களின் மே தின வாழ்த்து

மனித இனத்தின் உழைப்பைக் கழித்துப் பார்த்தால் இந்த பூமியில் கல்லும் மண்ணும் தான் மிஞ்சி இருக்கும். உணவும், உடையும், உறைவிடமும் அளித்து உலகை உருவாக்கியது உழைப்பாளிகளின் வியர்வை என்றால் மிகையாகாது. ரத்தத்தைப் பாலாக்கி குழந்தைகளை வளர்க்கும் தாய்போல், ரத்தத்தை வியர்வையாக்கி பூமியை வளர்க்கும் உழைப்பாளிகளை அங்கீகரிக்கும் தினம் மே 1 ஆம் நாள் அன்று போற்றப்படும் உழைப்பாளர் தினம்.

தொழிலாளர்களும் உழைப்பாளர்களும் வருடத்தில் ஒரு நாள் மட்டுமே நினைத்துப் போற்றப்பட வேண்டியவர்கள் அல்லர். வருடம் முழுவதும் நினைத்து கௌரவப்படுத்தப்பட வேண்டியவர்கள். அந்த வகையில் உழைக்கும் வர்க்கம் சீரோடும், சிறப்போடும், செழிப்போடும் வாழ வகைசெய்வோம். இவ்வினிய உழைப்பாளர் தினத்தில் உழைக்கும் வர்க்கத் தோழர்களுக்கு என் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் இனிய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்